செ.வெ.எண்: 280 நாள்: 12.05.2021

# தஞ்சாவூர் அரசு மருத்துவமனைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை மற்றும் ராசா மிராசுதார் மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ள கொரோனா தடுப்பு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.எஸ்.சண்முகம் அவர்கள், திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை.சந்திரசேகர் அவர்கள், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. T.K.G.நீலமேகம் ஆகியோர் இன்று (13.05.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை மற்றும் ராசா மிராசுதார் மருத்துவமனையில் பார்வையிட்டு ஆய்வு செய்த பின் செய்தியாளரிடம் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை.சந்திரசேகர் அவர்கள் பேசியதாவது.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் சட்டமன்ற கூட்டம் முடிந்தவுடன், எல்லா அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவமனைகளில் என்னென்ன தேவைகள் உள்ளன என்பது குறித்து அரசு அலுவலர்கள், மருத்துவர்களுடன் ஆய்வு செய்து ஏதேனும் குறைகள் இருப்பின் உடனடியாக முதலமைச்சரின் தனி செயலாளருக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அந்த வகையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், தஞ்சாவூர் சட்டப்பேரவை உறுப்பினர் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர், மருத்துவ அலுவலர்களுடன் கலந்தாலோசித்தோம். தற்போது மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் போதிய வசதிகள் உள்ளன. ஒரு சில குறைகள் உள்ளன. ஆக்சிஜன் வசதி, தடுப்பூசி மருந்துகள் மற்றும் தேவைகள் குறித்தும், நோயாளிகளுக்கு தேவையான வசதிகள் குறித்தும், அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிந்துரை செய்து, சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உதவியோடு பெற்று தரப்படும்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை நோயாளிகள் பாதுகாப்புடன் உள்ளனர். அதுமட்டுமின்றி பக்கத்து மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமானோர் சிகிச்சைக்காக மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வருகின்றனர். அவர்களை நாம் திருப்பி அனுப்ப முடியாது. அவர்களையும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே எதிர்காலத்தில் நோயாளிகள் அதிகரிக்கும் பட்சத்தில் என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து இந்த ஆய்வு கூட்டம் நடத்தப்படுகிறது. ராசா மிராசுதார் மருத்துவமனையிலும், உரிய ஏற்பாடுகளை செய்து, சிகிச்சை அளிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆக்சிஜன் பற்றாக்குறை என்பது இல்லை. மற்ற மாவட்டங்களில் இருந்த தட்டுப்பாடும் இப்பொழுது சரி செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழக முதலமைச்சர் அவர்கள் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை அறிவித்துள்ளார். இது முன் களப்பணியாளர்களான மருத்துவ துறையினரிடம் பலத்த வரவேற்பை பெற்றுள்ளது என திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, சோழமண்டலம் முழுவதற்கும் தஞ்சாவூர் என்பது தாய்வீடு போன்றது. எனவே, மாவட்ட ரீதியாக பார்க்காமல் அனைவருக்கும் சிகிச்சை அளிக்க வேண்டிய கடமை மாவட்ட நிர்வாகத்திற்கும், தமிழக அரசிற்கும் உள்ளது. எனவே மற்ற மாவட்டங்களில் தேவைகள் குறித்து கேட்டறிந்து, மாநில அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படும். தடுப்பூசி என்பது பெரும்பாலானோருக்கு செலுத்தப்பட்டு வருகிறது. இனியும் தேவைப்படுவோருக்கு தடுப்பூசி செலுத்தும் வகையில் இருப்பு உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தடுப்பு பணிக்கு தொடர்பாக மருத்துவ அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, கூட்டத்தில் தற்போது பரிசோதனை செய்யப்பட்டு உள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்தும் எத்தனை நாட்கள் பரிசோதனை முடிவுகள் வழங்கப்படுகிறது, என்பது கூறித்து கேட்டு அறிந்தும், அரசு மற்றும் தனியார் மருத்து மனையில்படுக்கை வசதிகள் குறித்தும் அவற்றில் ஆக்சிஜன் இணைப்புடன் கூடிய படுக்கை வசதிகள் எவ்வளவு அதில் தற்போது நோயாளிகளின் அளவு நோயாளிகள் எவ்வளவு பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ஆகியவை குறித்து கேட்டறிந்தனர். மேலும் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டு உள்ளவர்களுக்கு வழங்கப்படக்கூடிய அறிவுரைகள் அவர்கள் தொடர்ந்து

கண்காணிக்கப்படுவது குறித்தும் கேட்டறிந்தனர். மேலும் அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் மற்றும் கொரோனா சிகிச்சைக்குப் பயன்படுத்த கூடிய மருந்துகள் கையிருப்பு ஆகியவை குறித்து கேட்டறிந்தனர்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் இ.கா.ப., அவர்கள், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ரவிக்குமார், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, மாநகராட்சி ஆணையர் ஜானகி இரவீந்திரன், முனைவர் மரு.மருததுரை, நிலை மருத்துவர்கள் செல்வம்,உசா, வட்டாட்சியர் திரு. பாலசுப்ரமணியன் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**